# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com

## 33 மொழிகளில் உலக மக்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளினால் ஜீவனை கொண்டு செல்கின்ற மான்மின் செய்தித்தாளின் 30வது ஆண்டுவிழா,

மான்மின் செய்தித்தாள் சகல தேசங்களின் சகல ஜனங்களுக்கும் தேவனுடைய வல்லமையையும் அன்பையும் கொடுக்க ஆரம்பித்து 30 ஆண்டுகள் ஆகிவிட்டன.

மே 17, 1987 அன்று, மான்மின் ஜூங் ஆங் செய்தித்தாள் மாதத்திற்கு ஒரு முறை என பிரசுரிக்கப்பட்டது. முதலாவது ஆங்கில செய்தித்தாள் 1991 அன்று பிரசுரிக்கப்பட்டது. அதே ஆண்டு அக்டோபர் மாதத்தில், சபையின் 9 ஆண்டுவிழா கொண்டாட்டத்தின்போது, செய்தித்தாளானது இரண்டு வாரத்திற்கு ஒரு முறையாக பிரசுரிக்கப்பட துவங்கியது. அக்டோபர் 2009 அன்று, சபையின் 27வது ஆண்டுவிழாவின்போது 300வது பதிப்பு 'மான்மின் செய்திகள்' என்று பெயர் மாற்றப்பட்டது. அது தற்சமயம் ஆன்லைன் மற்றும் ஆஃப்லைன் வழியாக பிரசுரிக்கப்படுகிறது. மேலும் அது சபையின் இலக்கிய ஊடக ஊழியத்தில் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது.

நவம்பர் 2012, சபையின் 30வது ஆண்டுவிழா முதற்கொண்டு www.manminnews.com என்ற வலைத்தளம் இயங்குகிறது. இந்த வலைத்தளம் 32 மொழிகளில் செய்தித்தாளை வழங்குகிறது, அவை: கொரியம், ஆங்கிலம், சீனம், பாரம்பரிய சீனம், ஜப்பானியம், ஸ்பானியம், ரஷியம், ப்ரான்சு, எபிரெயம், தமிழ், இந்தி, இந்தோனேசியம், போர்ச்சுகீசியம், மங்கோலியம், தாய், டகலாக், பிஷயன், அராபிக், எஸ்டோனியம், உக்ரைனியம், வியட்நாமியம், உருது, டச்சு, பல்கேரியம், ஃபின்னிஸ், டானிஸ், சுவிடிஸ், பர்மிஸ், நேபாளி, ஜெர்மன், இத்தாலியம் மற்றும் சிங்களம் போன்றவையாகும். இந்தச் சேவையின்மூலம் உலகம் எங்கிலுமுள்ள ஜனங்கள் செய்தித்தாளை வாசிக்க முடியும். ஜூன் 4, 2017 அன்று முதல், கிழக்கு ஐரோப்பாவின் மொல்டோவா மான்மின் சபை விசுவாசிகள், ரூமானிய மக்களின் வேண்டுகோளுக்கிணங்க, செய்தித்தாளானது ரூமானியத்திலும் வெளிப்பட உள்ளது.




உள்ளூர் சூழ்நிலைக்கேற்ப அது வாரத்திற்கு, இருவாரத்திற்கு, மாதத்திற்கு ஒரு முறையாகவும் பிரசுரிக்கப்படுகிறது. அதன் சிறப்பம்சங்களாவன: வேதாகமத்தின் தெளிவான விளக்கங்கள் அடங்கிய ஜீவன் நிறைந்த வார்த்தை; அநேக கேள்விகளுக்கான ஆவிக்குரிய பதில்களடங்கிய விசேஷித்த கட்டுரை; தேவனுடைய கிரியைகளை அனுபவித்த ஜனங்களின் சாட்சிகள்; மற்றும் கொரியாவிற்கு உள்ளும் புறம்பும் உள்ள சபைகளின் செய்திகள். இந்த பல்வேறு வகையான பொருளடக்கங்கள் விசுவாசிகள் அதிக ஆர்வத்தோடு சுவிசேஷத்தைப் பரப்பவும், தங்களது விசுவாசத்தில் வளரவும் உதவியாக இருக்கின்றன.

மான்மின் செய்தித்தாள் கொரியாவிற்கு உள்ளும் புறம்பும் உள்ள பல்வேறு வாசகர்களால் நேசிக்கப்படுகிறது. மேலும் அது இரட்சிப்பின் பாதைக்குள் அநேகரை வழிநடத்தும் ஒரு முக்கிய பங்கையும் வகிக்கிறது. கூடுதலாக, செய்தித்தாள் மூலமாக, பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள் நடைபெறுகின்றன; ஜனங்களும் தேவனுடைய வல்லமையான கிரியைகளை அனுபவிக்கின்றனர் (பார்க்க பக்கம் 3, 4).

போதகர் டேனியேல் ரோசன், இஸ்ரேலிய போதகர்கள் அமைப்பின் தலைவர் சொன்னது, "உலகத்தின் ஒவ்வொரு மூலைகளிலும் தேவனுடைய வார்த்தையையும் வல்லமையான கிரியைகளையும் பரப்புகிற மான்மின் செய்திகளுக்கு என் உள்ளங்கனிந்த நன்றிகளை தெரிவிக்க விரும்புகிறேன். ஆசீர்வாதங்களின் சாட்சிகளும், பாடங்களும் தேவனுடைய ராஜ்யத்தை விரிவுப்படுத்த நமக்கு ஊக்கமளித்து உதவிசெய்யும் ஆதாரமாக உள்ளது. உலகத்திலுள்ள மக்களை இரட்சிப்புக்குள் வழிநடத்துகிற இந்த ஜீவன்நிறைந்த செய்தித்தாளை வெளியிடுகிற தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களுக்கும் நான் நன்றி செலுத்துகிறேன். மான்மின் செய்திகளின் 30வது ஆண்டுவிழாவுக்கு வாழ்த்துக்கள்!"

சிங்கப்பூரிலிருந்து மிஷனரி வாங்பிங் பிங் சொன்னது, "மான்மின் செய்திகள் வாசிக்க எளிமையானது; வாசகர்கள் ஆவிக்குரிய அறிவை கற்கவும், தங்களின் வாழ்க்கைப் பிரச்சனைகளை தீர்க்கவும் உதவுகிறது. மேலும் அது சாட்சிகளின் மூலமாக அவர்களின் விசுவாசத்தையும் அதிகரிக்கச் செய்கிறது. அது பல்வேறு தலைப்புகள் உள்ளடக்கங்களை கொண்டுள்ளதால் வாசகர்களின் தேவைகளை பூர்த்திசெய்கிற ஒரு பயனுள்ள ஊடகமாக இருக்கிறது."

ஜப்பானிலுள்ள ஓசாகா மான்மின் சபையிலிருந்து வந்த கண்காணியை இவாமோடோ யொகோ சொன்னது, "என் வாழ்க்கையில் மான்மின் செய்திகள் மூலமாக நான் லாபமடைந்துள்ளேன். நான் சோதனைக்குள் இருக்கும்போது அத்தாளில் வாசித்த சாட்சிகள் நினைவுக்கு வரும். அதனால் விசுவாசத்தோடு அவைகளை என்னால் மேற்கொள்ள முடிந்தது. செய்தித்தாளில் வெளிவருகிற ஜீவனுள்ள வார்த்தை பல தலைப்புகளில் மிகவும் தெளிவாக புரிந்துக்கொள்ளும் விதத்தில் உள்ளது. நான் கட்டுரைகள், சாட்சிகள் மற்றும் செய்திகுறிப்புகளை என்னுடைய முகப்புத்தகத்தில் பதிவேற்றம் செய்கிறேன், மக்கள் அதை விரும்புகின்றனர்."

மூப்பர் ஹொங்கி பார்க் (வட்டார ஆண் தலைவர்கள் குழுவின் தலைவர், லீ & கோ சட்ட மையத்தின் நிபுணர்கள் குழுவைச் சார்ந்தவர் மற்றும் ஹன்சோல் PNS ஆய்வாளர்) மாசு தொடர்பான நோயினால் ஏழு ஆண்டுகளாக வேதனைப்பட்டார். அவர் தற்செயலாக மான்மின் செய்திகளை வாசித்ததால், சபைக்கு வந்தார். அவர் கூறியது, "இருபது ஆண்டுகளுக்கு முன்பு என் வீட்டு கதவினருகே இருந்த மான்மின் செய்திகள் இந்தச் சபைக்கு என்னை வழிநடத்தியது. தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஜெபத்தினால் நான் சுகமடைந்தேன். என் வாழ்க்கை நன்றி, மகிழ்ச்சி மற்றும் புதிய எருசலேமிற்கான நம்பிக்கையினால் நிறைந்திருக்கிறது. என்னைப்போல வேதனையில் இருக்கின்றவர்களின் கரங்களில் இந்த செய்தித்தாள் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். ஜனங்களுக்கு வாழ்வளித்து, சுகமளிக்கிற மான்மின் செய்திகளுக்கு என் நன்றிகளை செலுத்துகிறேன்."

இரட்சிப்பின் மகிழ்ச்சியாலும், பரலோக நம்பிக்கையாலும், முடிவில்லாத அன்பாலும் கிருபையாலும் இந்த 30வது ஆண்டுவிழா வரைக்கும் உலகமெங்கிலும் கணக்கற்ற ஜனங்களை ஆசீர்வதித்த தேவனுக்கே சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்துவோம்.



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

# நிலத்தில் மறைந்துள்ள ஓர் பொக்கிஷம்

“அன்றியும், பரலோகராஜ்யம் நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப் பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான்” (மத்தேயு 13:44).

அநேக மக்கள் மெய்யான சந்தோஷத்தை தேடி கடுமையாக உழைக்கின்றனர். ஆயினும் அவர்களில் சிலர் மட்டுமே உண்மையான சந்தோஷத்தை தங்கள் வாழ்வில் உணருகின்றனர்.

அவர்கள் இடைவிடாமல் சிறந்த வாழ்வு வாழ முயற்சிக்கின்றனர், ஆனால் அவர்கள் தங்களிடம் உள்ளதை வைத்து திருப்தியை உணருவதில்லை. அவர்களில் சிலர் தங்கள் ஆஸ்தியையும் புகழையும்கூட ஒரே நாள் இரவில் தொலைத்துவிடுகின்றனர்.

### 1) பரலோகராஜ்யம் நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது.

தேவன் முதல் மனிதனாகிய ஆதாமைப் படைத்தபோது, அவர் அவனது ஆவி மனிதனுடைய எஜமானாய் இருக்கும்படிக்கு உருவாக்கினார். ஆத்துமா ஆவியினாலே கட்டுப்படுத்தப்பட்டது, சரீரத்தில்தான் அவனது ஆவியும் ஆத்துமாவும் வாழ்ந்தது. தேவன் ஆதாமை சர்வ சிருஷ்டிக்கும் எஜமானனாக ஏற்படுத்தி, எல்லாவற்றையும் ஆளுகை செய்யும்படிக்கு அவனை ஆசீர்வதித்தார். ஜீவ ஆத்துமாவாக, அவன் ஆவியாயிருக்கிற தேவனோடு தொடர்பாய் இருந்தான்.

இருப்பினும், நீண்ட காலத்திற்கு பிற்பாடு, ஆதாம் கீழ்ப்படியாமை என்ற பாவத்தைச் செய்தான். தேவன் அவனைப் புசிக்கவேண்டாம் என்று விலக்கி வைத்த நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்திலிருந்து புசித்தான். அதன்விளைவாக, மனிதனின் எஜமானாயிருந்த ஆவி மரித்தது, தேவனோடே இருந்த அவனுடைய தொடர்பு துண்டிக்கப்பட்டது. பாவம் செய்த ஆதாமின் இருதயத்துக்குள் பாவம் வந்தபடியால், தேவனளித்த ஆவிக்குரிய அறிவு, அதாவது வாழ்வின் அறிவு வெளியே நழுவிவிட்டது. காலம் அதிகமதிகமாக கடந்து போக போக, அவன் சாத்தானுடைய கட்டுப்பாட்டுக்குள் அதிகமதிகமான சத்தியத்துக்குப் புறம்பான காரியங்களை ஏற்றுக் கொண்டான்.

விளைவாக, மனிதனுடைய ஆவி ஒன்றும் இல்லாத பதரைப்போல மாறிவிட்டது. ஆதாமினுடைய சந்ததியினர் பின் தேவனை அங்கீகரியாமல் தேவனுடைய பார்வையில் சரியற்ற காரியங்களை செய்தனர் (ரோமர் 1:28–31).

அப்பேர்பட்ட மக்களுக்காக, தேவன் முன்னறிந்தபடியே உலகத்தோற்றத்திற்கு முன்பாக முன் குறிக்கப்பட்ட இயேசுவை காலங்களுக்கு மறைத்து வைத்து குறித்த நேரத்தில் உலகத்திற்கு அனுப்பினார். இயேசுவானவர் அவர்களுக்காக கிருபாதார பலியானார். அவர் மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்தார். அவருடைய உயர்த்தெழுதல் இரட்சிப்புக்கு வழி திறந்தது. ஆகவே இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற யாரானாலும் இரட்சிக்கப்பட்டு விசுவாசத்தால் பரலோகம் நுழைய முடியும்.

ராஜ்யத்தின் சுவிசேஷத்தை நாம் கேட்டு, இயேசுகிறிஸ்துவை ஏற்று, பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளும்போது, நம்முடைய மரித்த ஆவி உயிரடையும். விசுவாசத்தால் தேவனுடைய பிள்ளைகளாகும்படியான அதிகாரத்தைப் பெற்றோம். நம்முடைய நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் பதிவு செய்யப்பட்டன. அப்போது, நாம் மகிழ்ச்சியை உணர்ந்து எல்லா வகையான ஆராதனைகளிலும் பங்குப்பெற ஆரம்பித்தோம். நாம் தேவனுடைய வார்த்தையை பரிசுத்த ஆவியின் உதவியால் புரிந்துக்கொள்ளலானோம். மேலும் ஜெபிப்பதற்கும், வார்த்தையின்படி வாழ்வதற்கும் வல்லமையை பெற்றுக்கொள்ளலானோம்.

மத்தேயு 13ல், பரலோகத்தைக் குறித்து அநேக ஒப்புமையான உவமானங்கள் உள்ளன. அவைகளில் ஒன்றுதான், “நிலத்தில் மறைந்துள்ள பொக்கிஷம்.” இந்த உவமையின் ஒப்புமை நிலத்தில் மறைந்துள்ள பொக்கிஷத்தை கண்டறிதலை சுவிசேஷத்தைக் கேட்டு, இயேசுகிறிஸ்துவை ஏற்று, பரிசுத்த ஆவியை பெறுவதன்மூலம் மனிதர்களுடைய மரித்த ஆவி உயிர்ப்பிக்கப்படுகிறது என்பதற்கும் பரலோகம் அவர்களுடைய இருதயத்தில் வருவதற்கும் இணைக்கிறது.

### 2. ஒரு மனிதன் அதைக் கண்டு, மறைத்து, அதைப் பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தை வாங்குகிறான்.

“ஒரு மனிதன் அதைக் கண்டு மீண்டும் அதை மறைத்து” என்பது அவர்களுடைய மரித்த ஆவிகள் உயிர்ப்பிக்கப்பட்டன. அவர்கள் தேவனுடைய சித்தத்தின்படி வாழ விரும்புகின்றனர். ஆனால் அதன்படி வாழ்வதற்கு அவர்களுக்கு இன்னும் பெலன் அளிக்கப்படவில்லை, அதனால் அவர்கள் வார்த்தையிலே நடப்பதில்லை. அந்த மனிதன் உணருகிற “சந்தோஷம்” என்பது அவர்கள் பரலோகம் இருக்கிறது என்று தங்கள் இருதயங்களில் உணருகிறார்கள். அவர்களுடைய இருதயம் அவர்களுடைய ஆவி உயிரடையும்போது சந்தோஷத்தால் நிறைகிறது.

தேவனுடைய வார்த்தையிலே நடப்பதற்கு, நீங்கள் உங்கள் இருதயங்களிலிருந்து சத்தியத்திற்கு புறம்பானவைகளை களைந்துப்போட வேண்டும். இதன் காரணம் சாத்தான் அவர்களுடைய இருதயத்தில் இருக்கிற பொய்யான காரியங்களை கட்டுப்படுத்துவான். உங்கள் இருதயத்தில் அநீதியும் சத்தியத்திற்குப் புறம்பான காரியங்களை வைத்திருப்பீர்களானால், நீங்கள் தேவன்பேரில் உங்கள் விசுவாசத்தை அறிக்கைச் செய்தாலும்கூட அநீதியும் சத்தியத்திற்குப் புறம்பானவைகளும் உங்களை இருளுக்கு நேராக நடத்தும். ஆக, நீங்கள் எப்போதும் தேவனை சார்ந்து ஜெபிக்க வேண்டும். அப்போதுதான் நீங்கள் பரிசுத்த ஆவியின் சத்தத்தைக் கேட்டு, தேவனுடைய சித்தத்தை மட்டும் பின்பற்ற முடியும். “தனக்கு உண்டான எல்லாவற்றையும் விட்டு அந்த நிலத்தைக் கொள்ளுகிறான்” என்பதன் அர்த்தம் என்ன? இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபின் ஆத்துமாவுக்குள் அடைப்பட்டிருந்த ஆவி உயிர்ப்பிக்கப்பட்டாலும்கூட, ஆவி மனிதனுடைய எஜமானாய் செயல்படுவதற்கு நீங்கள் ஆத்துமாவின் கோணங்களை அழிக்க வேண்டும் (2 கொரிந்தியர் 10:5).

சாத்தானால் கட்டுப்படுத்தப்படுகிற ஆத்துமா தேவனுக்கும் சத்தியத்திற்கும் விரோதமாக எதிர்த்து நிற்கிறது. ஆக, ஆத்துமாவின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிற ஆவியுள்ள நபர் அதாவது, ஆத்துமாவின் நபர் சாத்தானால் கட்டுப்படுத்தப்பட்டு இருளில் வாழ்வார். அவர்கள் ஆத்துமாவின் சத்தியத்திற்கு புறம்பான கிரியைகளை அழிக்கும் வரையில், அவர்களது ஆவி உயிர்ப்பிக்கப்பட்டு, அந்த நபரின் எஜமானாய் மாற முடியாது. எந்தளவாய் ஆத்துமாவின் சத்தியத்திற்கு புறம்பான இயக்கம் அழிக்கப்பட்டு ஆவி அதிகமாக நிறைகிறதோ அந்தளவாய் உங்கள் ஆத்துமா செழிக்கும். அப்போது உங்களால் தேவனுடைய வார்த்தையின்படி வாழ முடியும். ஆகவே, நிலத்தில் மறைந்துள்ள பொக்கிஷத்தை நீங்கள் கண்டால், நீங்கள் ஊக்கமாக, “உங்களில் உள்ளவற்றை விற்று” அந்த நிலத்தை சீக்கிரம் வாங்கவேண்டும்.

### 3) உங்களிடத்தில் உள்ள எல்லாவற்றையும் பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்ற பரலோகத்தை பெற்றுக்கொள்வதற்கு

ஒரு தரிசு நிலத்தை பண்படுத்தும்போது தனது ஏருக்கு அடியில் ஏதோ ஒன்றை ஒரு மனிதன் உணர்ந்தான். அவன் கீழே தோண்டி ஒரு பெரிய பொக்கிஷத்தை கண்டடைகிறான். அவன் அதை மண்ணினாலே மறைத்து மூடிவிட்டு யோசிக்க ஆரம்பித்தான். இறுதியாக அவன் தனக்கு உண்டான யாவையும் விற்று நிலத்தை வாங்க தீர்மானித்தான். இதன் காரணம் தனக்கு உண்டான எல்லாவற்றைப் பார்க்கிலும் அவன் ஒரு பெரிய பொக்கிஷத்தை கண்டுக்கொண்டான்.

“தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்றல்” என்பது ஆவிக்குரிய ரீதியில் சத்தியத்திற்குப் புறம்பான ஆத்துமாவின் கிரியைகளை அழித்தல், மாம்சத்தின் கிரியைகளை களைந்துப்போடுதல் (கலாத்தியர் 5:19–21), மாம்சத்தின் காரியங்கள் அனைத்தையும் களைந்துப்போடுதல் ஆகும் (ரோமர் 13:13–14). இவைகள் அனைத்தும் தேவனுடைய வார்த்தைக்கு ஏற்றதாயிராதவைகள். தேவனை விட அதிகமாக நீங்கள் நேசிக்கிற எதையும் விட்டுவிடுதல் ஆகும்.

உதாரணமாக நீங்கள் நேசி, நன்றி செலுத்து, விபச்சார சிந்தையை களைந்துப்போடு, களவு செய்யாதே என்று சொல்லுகிற பிரசங்கத்தை கேட்கிறீர்கள். நீங்கள் கேட்டபடியே அதற்குக் கீழ்ப்படிந்து ஜெபத்தின்மூலமாக பாவங்களையும் தீமைகளையும் களைந்துப்போட்டால், அப்போது, “அது உங்களுக்கு உண்டான யாவையும் விற்கும்” செயலாகும். நீங்கள் பாவங்களையும் தீமைகளையும் களைந்துப்போட போட நீங்கள் பரிசுத்த ஆவியின் வாஞ்சைகளைப் பின்பற்றி வார்த்தையின்படி வாழ முடியும். நீங்கள் ஆவிக்குள் நுழைந்து இந்த உலகத்தில் உப்பாகவும் வெளிச்சமாகவும் மாறுவீர்கள்.

வேறு வார்த்தையில், “தனக்கு உண்டான யாவையும் விற்று” என்பது பாவத்திற்கு விரோதமாக இரத்தம் சிந்தப்படத்தக்கதாக போராடி தேவனுடைய வார்த்தையின்படி வாழ்தல் (எபிரெயர் 12:4), ஆவிக்குரிய மக்களாய் மாறுதல், திவ்ய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாகுதல், இயேசு கிறிஸ்துவின் இருதயத்தை அடைதல் ஆகும் (2 பேதுரு 1:4). ஏதோ ஒன்றைப் பெறுவதற்கு, நாம் கட்டணம் செலுத்த வேண்டும் அல்லவா. அதேபோல, நீங்கள் பரலோகத்தைப் பெற விரும்பினால், பரலோகத்தின் எஜமானாய் இருக்கிற தேவனுக்கு நீங்கள் ஏதாகிலும் செலுத்த வேண்டும். நீங்கள் ஆவியோடும் உண்மையோடும் ஆராதித்தால், உங்களை தியாகம் செய்தால், உங்கள் நேரத்தையும் பணத்தையும் தன்னார்வமாய் செய்தால், உங்களுக்கு உண்டான அனைத்தையும் ஏறெடுத்தால் நீங்கள் பரலோக ராஜ்யத்தைப் பெறமுடியும்.

கூடுதலாக, நீங்கள் உங்களிடத்தில் உள்ளவற்றை நிலத்தில் மறைக்கப்பட்ட பொக்கிஷத்தைக் காட்டிலும் சிறப்பாக நினைத்தால், உங்களால் நிலத்தை வாங்க முடியாது என்பதை நினைவில் வைக்க வேண்டும். மேலும் நிலத்தில் பொக்கிஷம் மறைந்துள்ளது என்பதை நீங்கள் அறியாவிட்டால் அல்லது நீங்கள் அதை விசுவாசியாவிட்டால், உங்களிடத்தில் உள்ளவற்றை நீங்கள் விற்கமாட்டீர்கள்.

எனினும், நீங்கள் உண்மையில் பரலோகராஜ்யத்தை விசுவாசித்தால் உங்களால் பாவத்திற்கு விரோதமாக இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக போராட முடியும். அவைகள் அனைத்தையும் தூக்கி எறிந்து விட முடியும்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, உலகில் உள்ள போதே அவர்கள் அனைத்தையும் எறிந்துவிட்டாலும்கூட, பரலோகத்தை சுதந்தரிப்பவர்கள்தான் பூமியிலே ஐசுவரியவான்கள்! இதன் காரணம் அவர்களுக்கு தேவையான அனைத்தும் கிறிஸ்து இயேசுவில் உள்ளது. ஆகவே, நீங்கள் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாய் இருக்கிற அனைத்தையும் களைந்துப்போட்டு வார்த்தையின்படி மட்டுமே வாழ உங்களை ஊக்கப்படுத்துகிறேன். நீங்கள் பொக்கிஷத்தை காணவும் இப்படி செய்வதால், உங்கள் இருதயம் பரலோகம் போலாகி நித்திய பரலோகத்தை நீங்கள் சுதந்தரிக்கவும் ஆண்டவருடைய நாமத்தில் உங்களுக்காய் ஜெபிக்கிறேன்.

## விசுவாசத்தின் அறிக்கை

1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.
2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்
3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.
4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.
5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை “அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்” மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.

“எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]...” [அப். 17:25]

“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” [அப். 4:12]

# “சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற நபர் மட்டுமே அதின் சந்தோஷத்தை அறிவார்”

**தேவனுடைய கிருபைக்காக நன்றியோடு மான்மின் செய்தித்தாளை பகிர்ந்துகொடுத்ததால் மான்மின் அங்கத்தினர்கள் தங்கள் பெலவீனங்கள் மற்றும் வியாதியிலிருந்து சுகமாகி ஆரோக்கியமானார்கள் என்கிற பல சாட்சிகள் கொரியாவிற்கு உள்ளும் புறமும் உள்ளன.**




கண்காணி ஃபேபரிஸ் ஃலான்ரோ, வயது 49, ஹேய்நாட் மான்மின் திருச்சபை, பெல்ஜியம்

## “தேவனுடைய வல்லமை மிகவும் அவசியமாயுள்ள ஐரோப்பாவில் பரிசுத்த ஆவியின் கிரியைகளை பிரசங்கிக்கிறேன்”

நான் ஒரு உண்மையான திருச்சபையையும் மேய்ப்பரையும் தேடிக் கொண்டிருக்கையில், ஏப்ரல் 2011ல் போதகர் கிறிஸ்டினா ரோ அவர்களால் நடத்தப்பட்ட கைக்குட்டை சுகமளிக்கும் (அப். 19:11–12)) கூட்டத்தில் கலந்து கொள்ள நேர்ந்தது. பிற்பாடு, நான் திருச்சபையின் இணையத்திற்கு சென்று செய்திகளை கேட்டேன். அயல்தேசத்து படைமுயற்சி கூட்டங்கள் மற்றும் கலைநிகழ்ச்சிகளை பார்த்தேன். 2012 முதல் போதகர் ரோ மற்றும் நானும் சார்லேரோயில் ஒவ்வொரு ஞாயிறு மதியமும் மான்மின் செய்திகளை கொடுத்து வந்தோம். பரிசுத்த சுவிசேஷத்தை பெல்ஜியத்திலும் ஐரோப்பா முழுவதிலும் பரப்ப விரும்புகிறோம். மேலும் ஐரோப்பாவில் அதிகமான கிளை சபைகள் ஸ்தாபிக்கப்பட விரும்புகிறோம்.

பெல்ஜியத்தின் தலைநகரமான பிருசெல்சில், முக்கிய அலுவலகங்கள் அங்கே இருப்பதால் ஐரோப்பிய யுனியனின் தலைமையான டேஃவேக்டோ அங்குள்ளது. அற்புதங்களையும் அடையாளங்களையும் காணாமல் மக்கள் விசுவாசத்தைக் கொண்டிருப்பது எளிமை அல்ல என்பதால் இங்கு தேவனுடைய வல்லமையான கிரியைகள் அவசியமாயுள்ளன. நான் அதிக வாஞ்சையோடு சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு அதுவும் ஒரு காரணம். என்னுடைய குடும்பம், சக பணியாளர்கள், அயலகத்தார் மற்றும் நண்பர்களை சுவிசேஷிக்க முயற்சித்தேன். வீதியிலுள்ள மக்களுக்கும் மான்மின் செய்திகளை கொடுத்துள்ளேன். மக்களை இரட்சிப்பதற்கு இது ஒரு சிறந்த வழி என நம்புகிறேன்.

வாராந்திர செய்தித்தாள்களை கொடுக்கையில் நான் ஆண்டவருடைய அன்பை அனுபவித்துள்ளேன்; புதிய அங்கத்தினர்கள் திருச்சபையில் சேர்க்கப்பட்டார்கள். திருச்சபைக்கு நீண்ட காலம் வராதவர்கள்கூட திரும்பி வந்தார்கள். அதே வேளையில், நான் எதிர்பாராத மிகப் பெரிய ஆசீர்வாதத்தை தேவன் 2015 கோடை ஏகாந்தத்தில் எனக்கு தந்தார். எனது செவித்திறன் குறைப்பாட்டிலிருந்து நான் சொஸ்தமானேன். 40% கேட்கும் திறனை இழந்திருந்தேன், ஆனால் இப்போது என்னால் நன்றாக கேட்க முடிகிறது. அல்லேலூயா!



சகோதரி தெரேசா நகம்மா, வயது 80, பெரு மான்மின் திருச்சபை

## “ஜீவனுள்ள வார்த்தையை என்னால் பரப்பாமல் இருக்க முடியவில்லை”

நான் 2012ல் பெரு மான்மின் திருச்சபையில் பங்குப்பெற ஆரம்பித்தபோது, நான் வாழ்வின் உண்மையான அர்த்தத்தை புரிந்துகொண்டேன். நான் “அன்பு அத்தியாயம்” மற்றும் “நற்குணம்” என்ற பிரசங்கங்களை கேட்டபோது அதிர்ச்சியடைந்தேன். காரணம் மக்கள் அன்பு என்று நினைக்கிற அன்புக்கும், தேவன் அங்கீகரிக்கிற அன்புக்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருந்தது.

நான் மான்மின் மத்திய திருச்சபையின் தலைமை போதகர், அறிவர். ஜேராக் லீ அவர்களிடமிருந்து இந்த விலையேறப்பெற்ற ஜீவ வார்த்தை வந்தது என்று நான் கேள்விப்பட்டேன். எண்ணற்ற உபவாச ஜெபத்தின் கனியாக தேவனிடத்திலிருந்து இந்தச் செய்திகளை அவர் பெற்றார். பிற்பாடு நான் பரலோகத்தின் நம்பிக்கையைப் பெற்றுக் கொண்டேன். ஆண்டவருடைய அன்பை அதிகமாக கற்றுக்கொண்டதால், நான் என் வாழ்வில் மாற்றத்தை அனுபவித்தேன், எனது குணாதிசயம்கூட மாறியது. எனது வாழ்வு முழுவதும் சமாதானத்தினால் நிறைந்துள்ளது.

கிருபைக்காக நன்றியுடன், கூடுமான அளவு அநேக மக்களுக்கு நற்செய்தியை பரப்ப விரும்புகிறேன். அதனால் நான் மான்மின் செய்தித்தாளை பகிர்ந்து கொடுக்க ஆரம்பித்துள்ளேன். ஜீவ வார்த்தை, தேவ அன்பு மற்றும் தேவனுடைய வல்லமையால் மாற்றப்பட்டவர்களின் சாட்சிகள் அடங்கியுள்ள அதை இரவு பகலாக கொடுத்து வருகிறேன். சனிக்கிழமைகளில் நான் அதை மருத்துவமனைகளிலும் வீதியிலுள்ள வர்களுக்கும் எனது திருச்சபை அங்கத்தினர்களோடு கொடுத்து வருகிறேன். முன்பைக் காட்டிலும் இப்போது ஆரோக்கியமாகியுள்ளேன். விவரிக்க முடியாத மகிழ்ச்சியினால் நிரப்பப்பட்டுள்ளேன்.

தேவனுடைய மற்றும் ஆண்டவருடைய இருதயத்தையும் சித்தத்தையும் நாம் அறிந்துக்கொள்வதற்கு ஏற்ப ஜீவ வார்த்தையை கொடுக்கிற தலைமை போதகருக்கு என்னுடைய நன்றியை செலுத்துகிறேன்.




மூத்த கண்காணியை ஜோங்கே கிம், வயது 70, மாகாணம் 31, மான்மின் மத்திய திருச்சபை

## “எனது கணவர் மான்மின் செய்தித்தாளை வீட்டுக்கு கொண்டுவந்து ஆலயத்திற்குப் போவோமா என்றார்”

நான் பல திருச்சபைகளில் பங்குப்பெற்றுள்ளேன். இருப்பினும் ஜீவ வார்த்தைக்காக ஆவிக்குரிய தாகத்தோடு இருந்தேன். ஒரு நாள், எனது கணவர் ஒரு செய்தித்தாளை கொண்டு வந்து அதை என்னிடம் கொடுத்தார். அவர், “தேனே, நாம் இந்த திருச்சபைக்கு போவோம்” என்றார். அந்த தாள் மான்மின் செய்தித்தாளாய் இருந்தது.

மே 1993ல், நான் அவருடன் மான்மின் மத்திய திருச்சபைக்குச் சென்றேன். அந்தத் திருச்சபை அதன் முதல் எழுப்புதல் கூட்டத்தை நடத்திக் கொண்டு இருந்தது. அந்த திருச்சபைக்கு அதுதான் என் முதல் விஜயம், ஆனால் நான் வீடு திரும்பியதுபோல உணர்ந்தேன். அந்த விஜயத்தில் தேவனுடைய அரவணைப்பை உணர்ந்தேன்.

தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் பரலோகத்திலுள்ள வித்தியாசமான வாசஸ்தலங்களைக் குறித்துப் பிரசங்கித்தார். பல ஆண்டுகள் நான் திருச்சபையில் பங்குப்பெற்றுக் கொண்டிருந்தாலும்கூட இப்பேர்பட்ட செய்திகளை ஒருபோதும் நான் கேட்டதில்லை. அது தேன்கூட்டைவிட மிகவும் இனியதாக எனக்கு இருந்தது. ஒவ்வொரு கூட்டத்திலும் நான் கண்ணீர் சிந்தினேன்.

தலைமை போதகரின் செய்திகளின் மூலமாக நான் கிறிஸ்தவ வாழ்வின் மிக முக்கிய சாரம்சமே ஆண்டவரின் இருதயத்தை அடையப் பெறுவதுதான் என்பதை உணர்ந்துக் கொண்டேன். நான் தானியேல் ஜெபக்கூடுகையில் ஊக்கமாக ஜெபித்தேன். கூட்டத்திற்குப் பிறகு அதிகமான ஜெபத்தை ஏறெடுத்தேன். வார்த்தையின்படி வாழ முயற்சித்தேன். இதற்கிடையில், எனது கணவனாருக்கு கார் விபத்து ஏற்பட்டது. அவரது காரை உரித்து எடுக்க வேண்டியிருந்தது, ஆனாலும் அவர் காயப்படவே இல்லை. அவர் இப்பேர்ப்பட்ட தேவனுடைய ஆச்சரியமான கிரியையை அனுபவித்தார்.

தேவனுக்கான மிகுந்த நன்றியுடன் என்னை இந்தத் திருச்சபைக்கு வழிநடத்திய மான்மின் செய்தித்தாளை நான் பிறருக்கு கொடுக்க ஆரம்பித்தேன். நானும் எனது கணவரும் மழை பெய்தாலும் பனி பெய்தாலும் 17 ஆண்டுகளாக ஒவ்வொரு வாரமும் 600 செய்தித்தாள் பிரதிகளை கொடுத்துள்ளோம்.

பிறருக்கு மான்மின் செய்தித்தாளை கொடுக்கும் கிருபை எனக்கு அளிக்கப்பட்டபடியால் நான் நன்றியுள்ளவளாய் உள்ளேன். இப்போது எனக்கு எழுபது வயதானாலும்கூட நான் எந்த ஒரு வியாதியும் இல்லாமல் ஆரோக்கியமாக இருக்க தேவன் என்னை ஆசீர்வதித்துள்ளார். நான் கியாங்கி மாகாணம் பூச்சானிலிருந்து சீயோல், குரோடாங்கிலுள்ள மத்திய திருச்சபையில் தானியேல் ஜெபக்கூடுகையில் பங்குப் பெறச் செல்கிறேன். எனது பணித்தளத்தின் குழு தலைவராக தேவனளித்த கடமையை நிறைவேற்றுகிறேன். நான் ஆண்டவருடைய அழகான மணவாட்டியாக, கிறிஸ்துவின் நற்கந்தமான வாசனையை கொடுப்பதற்கும் ஜீவனுள்ள தேவனுடைய அன்பை பிறருக்கு அறிவிக்கிறவளாகவும் இருப்பேன் என நம்புகிறேன்.

# ‘‘மான்மின் செய்தித்தாளை வாசித்தபோது என் மகன் காப்பாற்றப்படுவான் என்று நம்பினேன்’’

**மூத்த கண்காணியை ப்யங்ரே மூன், வயது 82, 31வது மாகாணம், மான்மின் தலைமை சபை**

என் மூத்த மகன் கல்லூரி நுழைவு தேர்வில் தோல்வியடைந்து, மனநோயினால் வேதனைப்பட்டபொழுது ஒரு காரிருள் என் குடும்பத்தை சூழ்ந்தது. அவன் கிராமத்தில் இங்கும் அங்குமாக அலைந்துதிரிந்து, கூச்சலிட்டான். அவனை பேயோட்டும் மந்திரவாதியிடம் கூட்டிச் சென்றோம், மருத்துவமனைக்கும் அழைத்துச் சென்றோம்; எதுவும் அவனுக்கு உதவவில்லை. நான் பல வருடங்களை கண்ணீரினால் செலவிட்டு, அதிகமாய் வேதனை–யடைந்தேன்.

1993ம் ஆண்டு ஒரு நாள், எனக்கு அறிமுகமான ஒருவர் மான்மின் செய்திகளை எனக்குக் கொடுத்துவிட்டு, மான்மின் தலைமை சபையின் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஜெபத்தினால் அநேக மக்கள் தங்களது வியாதிகளிலிருந்து சுகமடைந்து வருகின்றனர் என்று சொன்னார். நான் செய்தித்தாளை வாசித்தேன்; அதுதான் என் மகனை காப்பாற்றுவதற்கான வழி என்று நம்பினேன். நான் சியோசன் என்ற ஊரிலிருந்து சீயோலுக்குச் சென்றேன், செய்தித்தாளில் இருந்த தோராயமான வரைபடத்தின்மூலமாக சபையை கண்டுபிடித்தேன். நான் மான்மின் தலைமை சபையில் பதிவும்செய்தேன்.

நான் செய்திகளை கேட்க ஆரம்பித்தபொழுது, தேவன் அதிகமாய் அருவருக்கிற விக்கிரகாராதனையென்னும் பாவத்தைச் செய்ததைக் குறித்து உணர்த்தப்பட்டு, அதைப் பற்றி முற்றிலுமாக மனந்திரும்பினேன். பிறகு, என் மகன் மனநோயிலிருந்து விடுதலைப் பெற்றான். அல்லேலூயா!

1998ல், என் இரண்டாவது மகன் பக்கவாதத்தினால் நிலைகுலைந்து போனான். அவன் உயிர்பிழைக்க 30 சதவீதமே வாய்ப்பிருந்தது. எப்படியிருந்தாலும், அவன் கைக்குட்டை ஜெபத்தை (அப். 19:11–12) பெற்றதால் நல்ல ஆரோக்கியத்தை திரும்ப பெற்றுக்கொண்டான். 2002ம் ஆண்டு எனக்கு முதுகெலும்பில் வீக்கம் இருப்பது கண்டறியப்பட்டது. மருத்துவர் என் முதுகு எலும்பை எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக செயற்கையான ஒரு எலும்பை பொருத்தும் பெரிய அறுவை சிகிச்சையை செய்ய வேண்டுமென்று சொன்னார். எப்படியிருந்தாலும், நான் தலைமை போதகருடைய ஜெபத்தை பெற்ற பிறகு பரிபூரணமாக சுகமடைந்தேன்.

இப்பொழுது கர்த்தருக்குள் என் குடும்பம் எப்பொழுதும் சமாதானமாய் இருக்கிறது. பொருளாதார மந்தநிலைமையிலும்கூட என்னுடைய இரண்டாவது மகன் தன் தொழிலில் பொருளாதார ஆசீர்வாதங்களைப் பெற்றுள்ளான். அவன் மற்றொரு பெரிய தொழிலை துவங்கியுள்ளான். என் மருமகளும்கூட துணைவட்டார குழு தலைவியாக இருக்கிறாள். என் மகள் சிறுகுழு தலைவியாகவும், கோல்டன் லைட் குழுவின் அங்கத்தினராகவும் இருக்கிறாள். என் மருமகன் மான்மின் தன்னார்வளர்கள் குழுவின் அங்கத்தினராக இருக்கிறார். நாங்கள் அனைவரும் பரலோகத்திற்கான நம்பிக்கையோடு வாழ்ந்து வருகிறோம்.

என்னால் கையாள முடியாத குடும்பம் மற்றும் வாழ்க்கை பிரச்சனைகளால் நான் அவதிப்பட்டு வந்தேன். ஆனால் ஜீவனும் வல்லமையும் நிறைந்த சபைக்கு என்னை வழிநடத்தியது மான்மின் செய்திகளே. ஆசீர்வாதமான செய்தித்தாளை எனக்கு கிடைக்கும்படி செய்த தேவனுக்கே சகல நன்றிகளையும் மகிமையையும் நான் செலுத்துகிறேன்.



# ‘‘ஜீவனுள்ள வார்த்தையும் ஆசீர்வாதமும் அடங்கிய மான்மின் செய்தித்தாளை நான் கொடுக்கிறேன்’’

**சகோதரர் மியங்கில் பேங், வயது 41, நியூயார்க் சர்வதேச மான்மின் சபை, அமெரிக்கா**




பிப்ரவரி 2011ல், என் அம்மா மான்மின் தலைமை சபையின் வலைத்தளத்திற்குள் சென்று, ‘‘விசுவாசத்தின் அளவு’’ என்னும் பிரசங்கத்தைப் படிக்கும்படி எனக்கு மிகுந்த வேண்டுகோளை விடுத்தார். அவை மிகவும் ஆர்வமாக இருப்பதை உணர்ந்த எனக்கு நேரம் கடந்துபோன உணர்வே வரவில்லை. என் விசுவாசம் எந்த அளவு என்பதை என்னால் பரிசோதிக்க முடிந்ததால், மிகச் சிறந்த பரலோக வாழ்விடம் மற்றும் பரலோக வெகுமதிக்கான நம்பிக்கையை பெற்றுக்கொண்டேன். அதில் காணப்பட்ட பிரசங்கங்கள் ஆதியாகமம் புத்தகத்தைப் பற்றிய தெளிவான விளக்கங்களை கொடுத்தன. நான் இதுவரை அறிந்திராத பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையிலான ‘ஆவி மற்றும் மாம்சத்தை’ குறித்த விளக்கங்களும் காணப்பட்டன.

அதன்பிறகு, என்னுடைய கெட்ட பழக்கங்களை குறித்து சரியாக அறியாதபோதிலும் அவைகளை அகற்றிட ஜெபிக்க ஆரம்பித்தேன். தேவன் என்னிடத்திலிருந்து மிகத் தொலைவில் இருக்கிறார் என்றும், அவர் கண்டிப்பானவர் என்றும்தான் நான் நினைத்து வந்தேன். ஆனால் அதிக அன்புநிறைந்த ஒரு சாந்தமான பிதாவாக அவரை நான் உணர ஆரம்பித்தேன். மேலும் நான் GCNனில் (www.gcntv.org) பிரசங்கத் தொடர்களை பார்த்தேன். நான் தலைமை போதகரை பார்க்கையில், அவர்பேரில் அதிக நன்றிகளை உணர்ந்தவனாய் கண்ணீர் சிந்தினேன். இதற்கிடையில், பரிசுத்த சுவிசேஷத்தை கேட்டிராத ஜனங்களுக்காக நான் பரிதாபப்பட துவங்கினேன்.

ஆகஸ்டு 2015ல், நான் மான்மின் கோடை முகாமில் பங்குப்பெற்றேன். பிறகு அமெரிக்காவிலுள்ள நியூயார்க் சர்வதேச மான்மின் சபையில் பங்குப்பெற துவங்கினேன். நியூயார்க்கிலுள்ள மன்ஹாட்டனில் நான் டாக்சி ஓட்டுனராக பணிபுரிகிறேன். நான் மேய்ப்பரின் மண்டலத்தில் பாதுகாப்பையையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுள்ளேன். என்னுடைய டாக்சியில் வல்லமையான கிரியைகளும், ஜீவனுள்ள வார்த்தைகளும் அடங்கிய மான்மின் செய்திகளை வைத்துள்ளேன்; வருகிறவர்களுக்கு அதை தருகிறேன். நான் தொலைவான இடத்திற்குப் போகையில், அங்குள்ள ஜனங்கள் நல்ல தேவனை சந்திக்க முடியும் என்ற நம்பிக்கையோடு செய்தித்தாள்களை தபால்பெட்டியில் போட்டுவிடுவேன்.

என்னுடைய அம்மா மிகவும் பலவீனமாக காணப்படுவார்கள், ஆனால் அவர்கள் மூட்டுவீக்கத்திலிருந்து சுகமானார்கள். 2011 மான்மின் கோடை முகாமிற்காக கொரியாவிற்குச் சென்றபொழுது மான்மின் ஜெபமையத்தின் தலைவி போக்னிம் லீ அவர்களின் ஜெபத்தைப் பெற்றுக்கொண்டதால் ஆரோக்கியமாக இருக்கிறார்கள், ஜலதோஷம்கூட அவர்களுக்கு வரவில்லை. அவர்கள் ஒரு சபையில் ஊழியம் செய்கிறார்கள், மேலும் அனாதை ஆசிரமத்தை நடத்துகிறார்கள். அவர்கள் ஒவ்வொரு நாளையும் தலைமை போதகரின் ஜெபத்தைப் பெற்று ஆரம்பிப்பதால், பிள்ளைகளும் ஆரோக்கியமாக இருக்கிறார்கள்; சபையும் பொருளாதார ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்கிறது.

## அயல்தேசத்திலிருந்து வந்த கடிதம்

பிரியமான தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களுக்கும், மான்மின் விசுவாசிகளுக்கும்,

நாங்கள் தலைமை போதகருடைய பிரசங்கங்களினால் புதிதாக்கப்பட்டு புதிய எருசலேமை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் மொல்டோவாவில் உள்ள விசுவாசிகள்.

நாங்கள் தலைமை சபையின் ஆராதனை வேளைகளில் இணையம்வழியாக இணைந்துகொண்டு அதே ஆவிக்குரிய ஓட்டத்தில் இணைந்து பயணிக்கும்படி முயற்சித்து கொண்டிருக்கிறோம். நாங்கள் நேர வித்தியாசத்தின்நிமித்தம் ஞாயிறு காலை ஆராதனையில் பதிவுசெய்யப்பட்ட வீடியோ மூலமாக பங்குபெறுகிறோம். எங்கள் ஆலயத்தில் மாலை ஆராதனையில் நேரடி ஒளிபரப்பில் பங்கு பெறுகிறோம். நாங்கள் இரவு 8 மணி முதல் இரண்டு மணிநேரத்திற்கு தானியேல் ஜெபக்கூட்டத்தை நடத்தி, அநுதினமும் ஜெபிக்கிறோம்.

நாங்கள் ரஷிய பதிப்பான மான்மின் செய்திகளை தபால்மூலமாக வழக்கமாகப் பெற்றுக் கொண்டு வருகிறோம். அது எங்களது விசுவாசத்தை வளர்க்கவும், சுவிசேஷத்தைப் பரப்பவும் உதவுகிறது. எங்களுக்கு செய்தித்தாளின் தேவை அதிகமாக இருப்பதால் அதை பதிவிறக்கம் செய்து அச்சிட்டு கொடுக்கிறோம். எப்படியிருந்தாலும், இன்றைய காலக்கட்டத்தில் மொல்டோவாவில் உள்ள இளைஞர்கள் ரஷ்யமொழியை கற்பதில்லை, மாறாக கிராமப்புறங்கள் உட்பட அவர்கள் ரஷ்யத்திற்குப் பதிலாக ரூமானியா மொழியை அதிகம் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, எங்களது அதிகாரப்பூர்வ மொழியான ரூமானியத்தில் எங்களுக்கு சுவிசேஷ உபகரணங்கள் தேவைப்படுகிறது.

ரூமானியத்தில் மான்மின் செய்திகள் சீக்கிரத்தில் வெளியாக உள்ளதை கேள்விப்பட்டோம். அது எங்களுக்கு மிகுந்த சந்தோஷமும் மகிழ்ச்சியுமான செய்தி. நான் திருச்சபை ரூமானியத்தில் மான்மின் செய்திகளை வெளியிடுவதற்காக நன்றிசெலுத்துகிறேன்; மேலும் தம் அன்பினாலும் தியாகத்தினாலும் எங்களை இருதயத்தில் வைத்துள்ள தலைமை போதகருக்கும் என் நன்றிகளை செலுத்துகிறேன்.



**உலகமெங்கிலுமுள்ள விசுவாசிகளின் வேண்டுக்கோளுக்கிணங்க மான்மின் செய்திகள் தற்சமயம் 32 மொழிகளில் கிடைக்கப்பெறுகிறது. ஜூன் 2017ல், வெளியீடப்படவிருக்கும் ரூமானிய பதிப்பு 33வது மொழியாக இருக்கும்.**

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com